**பேருவலை பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பேருவலை பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 6,165,738 தொகை கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் கொடுத்தோர் பெறுமதி சரியாக ஒதுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு அறிக்கையின் நாட்குறிப்பின் மூலம் சரி செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு சகல கடன் கொடுத்தோர்களும் பதியப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ii) | மின்சார பொருட்கள் களஞ்சிய கணக்கின் 07 விடயங்களின் இறுதி இருப்பு மீதி ரூபா 121,075 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான மீதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iii) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் கொடுத்தோர் ரூபா 22,426,671 ஆக அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iv) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 167,475 | சகல இருப்புக்களும் | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான வேலை களஞ்சிய இருப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (v) | இருப்பு பெறுமதியாக பௌதீக இருப்பை கணக்கீடு செய்வதற்கு பதிலாக ரூபா 2,801,906 தொகையான புத்தக பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இருப்பு மெய்மெய்யாய்வின் மூலம் தேவையான சீராக்கங்களைச் செய்து சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (vi) | நிலையான சொத்துப் பதிவேட்டில் காணப்பட்ட 92 காணிக் கூறுகள் மற்றும் நன்கொடையாக கிடைத்த வாகனம் மற்றும் இயந்திர உபகரணங்கள் என 05 விடயங்களின் கிரயங்களை இனங்கண்டு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சகல சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஊழியர் கடன் மீதி ரூபா 19,625,031 ஆக இருந்த போதிலும், பதிவேட்டின் பிரகாரம் மீதி ரூபா 19,927,732 ஆனமையால் ரூபா 302,701 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பட்டோலைகள் காணப்படாமையினால் ரூபா 63,763,990 கூட்டுத் தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வு செய்த போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | பட்டோலைகளின் மீதிகள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமைகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- | --- | --- |
| | ரூபா | | | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | - | | | |
| (i) 21 ஆம் பிரிவு | | சபைக்குச் சொந்தமான வீதிகள் கிராம சேவகர் பிரிவின் பிரகாரம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான வீதிகள் சேவகர் பிரிவின் பிரகாரம் இனங்காண்டு அளவீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) 134(1) ஆம் பிரிவு | | ஆதன வரிக்காக புதிய இனங்காணல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆதன வரிக்காக இனங்காணல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | தேவையான நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iii) 147 மற்றும் 149 ஆம் பிரிவுகள் | | பட்டயக் கணக்காளர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்ட கணக்கு தொகுதிகள் கொண்டுவரப்படாத 11 ஹோட்டல்களில் அனுமதிப் பத்திரக் கட்டணம் பெறப்பட்டிருந்தது. | பட்டயக் கணக்காளர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்ட கணக்கு தொகுதியின் அடிப்படையில் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | பட்டயக் கணக்காளர் உறுதிப்படுத்திய தொகுதிகளின் பிரகாரம் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | | |
| | நிதிப் பிரமாணம் 104 | 107,830 | உடற் பயிற்சி நிலையத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட 06 பொருள் விடயங்கள் காணாமல் போணமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பரிசோதனையொன்று மேற்கொண்டு அறிக்கை எதிர் காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல். | - | 16 வியாபார நிறுவனங்களுக்கு சுற்றாடல் அனுமதிப் பத்திர கால எல்லை முடிவடைந்த போதிலும், புதிய அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டும். | புதிய அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 53,767,301 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,032,903 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப் பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 29,405,717 | 30,469,726 | 27,381,982 | 32,493,461 | 21,601,133 | 26,610,745 | 19,312,803 | 28,899,074 |
| (ii) | வாடகை | 25,209,515 | 19,221,794 | 17,655,964 | 26,775,344 | 21,609,208 | 21,217,625 | 24,357,018 | 18,469,815 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 7,449,820 | 2,126,570 | 2,100,570 | 7,475,820 | 46,072,220 | 4,716,130 | 4,726,130 | 46,062,220 |
| (iv) | ஏனைய வருமானம் | 128,273,445 | 84,600,000 | 63,184,250 | 149,689,195 | 46,925,713 | 43,600,000 | 96,022,118 | -5,496,405 |
| | | 190,338,497 | 136,418,090 | 110,322,766 | 216,433,820 | 136,208,274 | 96,144,500 | 144,418,069 | 87,934,704 |

## 2.2.2 வருமான சேகரித்தலின் செலாற்றல்

### (அ) வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் 01 -05 ஆம் ஆண்டுகளுக்கு இடையிலான மீதி ரூபா 6,069,521 ஆக இருந்ததுடன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 1,581,346 ஆகும். | நிலுவை ஆதன வரி வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### (ஆ) வியாபார வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த வியாபார நிலுவை வரி ரூபா 648,120 ஆக இருந்ததுடன், அதில் 01 வருடத்திற்கு குறைவான நிலுவை ரூபா 390,520 தொகை, 01 – 03 வருடங்களுக்கு இடையிலான நிலுவை ரூபா 212,400 தொகை மற்றும் 03 – 05 வருடங்களுக்கு இடையிலான நிலுவை ரூபா 45,200 ஆக இருந்தது. | நிலுவை வியாபார வரி விரைவாக அறவிடப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) வியாபார வரிகள் உரிய ஆண்டின் ஆரம்பத்தின் போது அறவிட வேண்டிய போதிலும், தர்கா நகரத்தின் உப அலுவலகத்தில் 2013 முதல் 2018 வரை | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சில வியாபாரங்களில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அறவிடப்படாதுள்ள வியாபாரங்களில் இருந்து |

| | | |
|---|---|---|
| காணப்பட்ட நிலுவை ரூபா 161,760 ஆகும். | | அறவிடுவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(இ) கடை வாடகை**

| | | |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டின் இறுதியில் 01 – 05 வருடங்களுக்கு இடையிலான நிலுவை கடை வாடகை ரூபா 3,355,830 ஆகும். | நீண்ட கால நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டும். | நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ii) வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்லுகின்ற 28 கடைகளின் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்ததன் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டு முதல் 2019 திசெம்பர் வரை அறவிட வேண்டிய ரூபா 1,793,115 தொகையான நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் சில கடைகள் மூடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

**2.2.3 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடம் இருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 31,007,602 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 79,000,869 ஆக இருந்தன. | நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| | மீளாய்வாண்டில் ரூபா 22.9 மில்லியன் கிரயமான 144 செயற்திட்டங்களின் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு புறம்பாக அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தை அமுல்படுத்துதலின் செயல் முன்னேற்றம் அளவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | செயற்திட்டத்திற்காக சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | |
| | சபைக்குச் சொந்தமான கூட்டுப் பசளைத் தளத்தில் காணப்பட்ட உக்கும் கழிவுகளை அகற்றுவதற்காக சேவை உடன்படிக்கையின் மூலம் வெளித்தரப்பினருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் பிரிவில் உள்ளடக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பம் இடாமையினால் தேவைகளுக்கு புறம்பாக மண் போடப்பட்டமை மற்றும் கிருமி நாசினிகளுக்காக ரூபா 56 இலட்சத்திற்கு மேற்பட்ட செலவினம் ஒன்று செய்யப்பட்டிருந்தது. | உடன்படிக்கை கைச்சாத்திடும் போது உடன்படிக்கைப் பிரிவில் முறையாக உள்ளடக்கப்பட்டு மண் மற்றும் கிருமி நாசினிகள் பயன்படுத்தப்பட வேண்டும். | உடன்படிக்கையின் பிரகாரம் மண் மற்றும் கிருமி நாசினிகள் பயன்படுத்தப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (இ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு | | |
| (i) | மீளாய்வாண்டில் நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட ரூபா 1.5 மில்லியன் கிரயமான 06 செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்தும்வதற்கான திட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) | 05 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், அதன் குறிகாட்டிகளின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் நலனாளிகளை இனங்கண்டு | நிலைபேறானா அபிவிருத்தி செயல் முன்னேற்றங்கள் இனங்கண்டு | எதிர் காலத்தில் செயல் முன்னேற்ற அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என |

| | | | |
|---|---|---|---|
| | செயல்முன்னேற்றம் அறிக்கையிடுதல் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அளவிடப்பட வேண்டும். | அறியத்தருகின்றோம். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பதிய சந்தைத் தொகுதியின் 05 ஆம் இலக்க கடையின் உடன்படிக்கை செய்த வாடகையாளர் 1999 ஆம் ஆண்டில் மரணமடைந்ததன் பின்னர் அந்த கடை சபைக்கு கையேற்கப்படாது செல்லுபடி உடன்படிக்கையும் இன்றி வேறொரு நபருக்கு கடை வாடகை அறவிடப்படாமல் வழங்கப்பட்டிருந்தது. | கடையினை வாடகைக்கு வழங்கும் போது முறையான பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1999 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 60 கடைகள் 2019 திசெம்பர் இறுதி வரையிலும் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகைக்கு வழங்கும் போது வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் கடைகளை அபிவிருத்தி செய்து வாடகைக்கு வழங்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (இ) | சகல விளம்பர அறிவித்தல் பதாதைகள் தொடர்பாக மெய்மெய்யாய்வொன்று மேற்கொண்டு கட்டணம் அறிவிடப்பட்டிருக்கவில்லை. | அறிவித்தல் பதாதைகள் மெய்மெய்யாய்வு செய்யப்பட்டு கட்டணம் அறவிடப்பட வேண்டும். | சில அறிவித்தல் பதாதைகளுக்காக கட்டணங்கள் அறவிடப்பட்டுள்ளதுடன், கட்டணம் அறவிடப்படாத விளம்பரங்களுக்காக அறவிடுவதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ஈ) | அலுவலக செயற்பாடுகளை கணனி வலைப்பின்னல் படுத்துவதற்காக 2018 மார்ச் மாதம் ரூபா 4,645,000 செலவில் மென்பொருள் முறைமையொன்று கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், 2020 பெப்ரவரி 19 திகதி வரையிலும் வலைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மென்பொருள் முறைமையை வலைப்பின்னல் படுத்துதல் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | எதிர் காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் செயலாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் கடமை புரியும் செயலாளர் ஒருவர் சேவையில் நியமிக்கப்பட்டுள்ளார் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட இரண்டு ஆயுர்வேத வைத்தியர் பதவிகளில் ஒரு பதவியொன்று வெற்றிடமாக காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களுக்காக தேவையான அதிகார தரப்பினரிடம் கோரப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (இ) | இரண்டாம் நிலை பதவிகளில் 05 பதவிகளுக்காக 10 ஊழியர்களினதும், ஆரம்ப நிலையில் 05 பதவிகளுக்காக 30 ஊழியர்களினதும் வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ஈ) | நாட்கூலி அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ள ஆரம்ப நிலையில் 61 ஊழியர்களுக்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 15,518,799 தொகையொன்று சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகாரம் இன்றி கொடுப்பனவுகள் செய்யப்பட முடியாது. | சபையின் நடவடிக்கைகளுக்காக இருக்கின்ற ஊழியர்களின் எண்ணிக்கை போதியளவில் இல்லாமையினால் சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (உ) | அங்கீகரிக்கப்பட்ட 04 முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், செயற்திட்ட அடிப்படையில் முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய உதவியாளர்கள் என 13 பேர் சேர்க்கப்பட்டு ரூபா 1,689,395 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு சம்பளம் செலுத்தப்படல் வேண்டும். | முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கு உரிய செயற்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற 16 ஹோட்டல் நிறுவனங்களில் இருந்து மீளாய்வாண்டிற்கு அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஹோட்டல் கம்பனிகள் வியாபார நடவடிக்கைகளை ச் செய்யும் போது அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | பட்டோலைகளுக்காக அங்கீகாரம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமையினால் அனுமதிப் பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்த போதிலும் எதிர் காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**3.5 விளைவற்ற / குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதான அலுவலகம் மற்றும் 05 உப அலுவலகங்களுக்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 570,000 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட சகல கைவிரல் அடையாள இயந்திரம் 2019 ஆம் ஆண்டு முதல் செயற்பாடற்று காணப்பட்டதுடன் ரூபா 650,000 தொகை செலுத்தி கொள்வனவு செய்யப்பட்ட டுப்லோ இயந்திரமும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அந்த சொத்துக்கள் உரிய பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். | பரிசோதனையொன்று மேற்கொண்டு அறிக்கையொன்றை துரிதமாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | நெணசல நிலையத்தில் 30 பொருள் விடயங்கள் 2020 பெப்ரவரி இறுதி வரையிலும் பயனற்று காணப்பட்டது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பழுதுபார்த்தலுக்காக பிரதான அலுவலகத்தின் களஞ்சியத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | மூன்று உடற்பயிற்சி நிலையங்களுக்காக அறிவுரையாளர்கள் சேர்க்கப்படாமையினால் 2018 ஆம் ஆண்டின் பின்னர் பல சந்தர்ப்பங்களில் மூடப்பட்டமையின் காரணமாக ரூபா 19,476,880 | அந்த நிலையத்திற்கு தேவையான வளங்களைப் பெற்று அதனை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை | பயிற்சியாளர்களை சேர்த்துக் கொள்வதற்கு முடியாமை இதற்கான காரணம் என அறியத்தருகின்றோம். |

| | | |
|---|---|---|
| தொகை செலவில் திறக்கப்பட்டிருந்த நிலையத்திலிருந்து எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். | |

**3.6 வாகனப் பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்பாடற்ற 03 வாகனங்களை விற்றுத் தீர்த்தல் மற்றும் மேலும் 02 வாகனங்களை பழுதுபார்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், 2018 ஆம் ஆண்டில் பழுதுபார்த்தலை மேற்கொள்வதற்காக கையளிக்கப்பட்டுள்ள டெக்டர் வாகனம் 2020 பெப்ரவரி வரையிலம் பழுதுபார்த்தல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | விற்றுத் தீர்த்தல் மற்றும் பழுதுபார்த்தலுக் கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விற்றுத் தீர்ப்பதற்கு மற்றும் பழுதுபார்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 31 வாகனங்களில் 27 வாகனங்களின் வருமான அனுமதிப்பத்திரம் 2020 பெப்ரவரி இறுதி வரையிலும் பெறப்படாதிருந்ததுடன், 04 வாகனங்களின் காப்புறுதி சான்றுதழை பெற்றுக் கொள்ளாமல் ஓட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | வருமான அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதி சான்றுதழைப் பெற்று வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டும். | பழுதுபார்த்தலுக்காக கையளிக்கப்பட்ட போதிலும், அதன் தாமதத்தின் அடிப்படையில் மீண்டும் அதற்காக கையளிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். |

**3.7 வருடாந்த பொருள் / இருப்பு மெய்மெய்யாய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரியதாக வாகன மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |